DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.160/2017

Deposition of Witness : LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜா | Taluk | |
| Father's Name | கதிர்வேல் | Village | |
| Age | | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 11.08.2025. | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது பண்ருட்டியில் வசித்து ஆம்புலன்ஸில் EMT ஆக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சி பவானி, இலட்சுமி, மதியழகன் ஆகியோர்கள் முறையே எனது தங்கை, அம்மா, மாமா மகன் ஆவார்கள். ஆஜர் எதிரி எனது தங்கை பவானியின் கணவர். எனக்கு மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரியும், எனது தங்கை பவானியும் காதலித்து, எங்கள் வீட்டிற்கு தெரியாமல் திருமணம் செய்துகொண்டார்கள். அவர்களுக்கு 3 பெண் பிள்ளைகள் உள்ளார்கள். மேற்படி எனது தங்கை பவானிக்கும், அவரது கணவரான ஆஜர் எதிரிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்து தனித்தனியே வாழ்ந்து வந்தார்கள். எனது தங்கை பவானி அவரது கணவரான ஆஜர் எதிரியுடன் பிரிந்து வந்து எங்கள் வீட்டில், எங்கள் பெற்றோருடன் வசித்து வந்தார். மேற்படி 3 பெண் பிள்ளைகளில் ஒரு மகள் எனது தங்கையிடமும், 2 மகள்கள் ஆஜர் எதிரி ராமுவிடமும் இருந்தார்கள். மேற்படி எனது தங்கை அவரது ஒரு மகளுடன், எனது பெற்றோருடன் எங்கள் வீட்டில் இருந்த வருடம் 2013 முதல் 2014 வரை ஆகும். மேற்படி எனது தங்கை பவானி எங்கள் வீட்டில் இருந்தபோது நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் இரவுப்பணி முடித்து காலை நேரம் தான் வீட்டிற்கு திரும்புவேன். நான் எனது வேலைக்கு சென்றிருந்த நேரங்களில் அவ்வப்போது எதிரி ராமு எங்கள் வீட்டிற்கு வந்து எனது தங்கை பவானியிடம் அவரிடம் இருந்த மகளை கேட்டு சண்டை போடுவதை வழக்கமாக வைத்திருந்தார். நான் பணி முடிந்து வீட்டிற்கு திரும்பும்போது மேற்படி விவரத்தை எனது தங்கையும், எனது பெற்றோரும் என்னிடம் சொல்வார்கள். இந்நிலையில், 28.02.2014 அன்று காலை சுமார் 9.30 மணியளவில் நான் எனது இரவுப்பணியை மேற்படி மருத்துவமனையில் முடித்துவிட்டு, வீட்டிற்கு திரும்பி வந்து

நான் Freshup செய்துவிட்டு வந்து பார்த்தபோது எங்கள் வீட்டிற்கு வெளியில் சண்டைபோடும் சத்தம் கேட்டது. நான் வெளியே சென்று பார்த்தபோது எதிரி ராமுவும், அவரது அம்மா ஜெயந்தியும், தங்கை இலட்சுமியும், தம்பி அருள்ராஜ்-ம் எனது தங்கை பவானியிடம் அவரிடம் இருக்கும் மகளை கேட்டு, குழந்தையை என் தங்கையிடம் இருந்து பிடுங்கினார்கள். அப்போது என் அம்மா இலட்சுமி அங்கு இருந்தவர் மேற்சொன்ன நால்வரிடமும், ஏன் குழந்தையை என் மகளிடம் இருந்து பிடுங்குகிறீர்கள், குழந்தை அம்மாவிடமே இருக்கட்டும் என்று சொன்னார். அப்போது நானும், ராமுவிடம் ஏன் குழந்தையை புடுங்குறிங்க என்று கேட்டேன். அதற்கு ராமு என்னிடம் என் குழந்தையை நான் அப்படித்தான் பிடுங்குவேன், நீ என்னடா கேக்குறது, தேவடியா பையா என்று என்னை அசிங்கமாக திட்டினார். மேலும் எனக்கு அருகில் நின்றுகொண்டிருந்த என் அம்மா இலட்சுமியையும், என் தங்கை பவானியையும் எதிரி ராமு கையால் மாறி மாறி அறைந்தார். அவர் அறைந்தபின்னர் அவரிடம் நான் ஏன் அவர்களை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு அவர் அப்போது கையில் வைத்திருந்த பலாப்பழம் அறியும் கத்தியால் எனது வலது கண்புருவத்திற்கு கீழ் வெட்டினார் (சாட்சி வலது கண் புருவத்திற்கு கீழ், வலது கண்ணிற்கு அருகில் உள்ள வடுவை காட்டினார் ). மேலும் மேற்சொன்ன ராமுவின் அம்மா, தங்கை, தம்பி ஆகியோர்களும் என் தங்கையையும், அம்மாவையும் கையாலும், அருகில் கிடந்த விறகு கட்டையையும் எடுத்து அடித்தார்கள். மேற்சொன்ன ராமுவின் அம்மா ஜெயந்தி, தங்கை இலட்சுமி, தம்பி அருள்ராஜ் மூவரும் சேர்ந்து என் அம்மாவை தாக்கியதில் என் அம்மா அங்கேயே கீழே விழுந்துவிட்டார். விழுந்தவரின் முதுகில் மேற்சொன்ன ஜெயந்தி, இலட்சுமி, அருள்ராஜ் ஆகியோர்கள் கையால் அடித்தார்கள். மேற்படி சம்பவம் நடந்த உடனே பண்ருட்டி அரசு மருத்துவமனையில் அப்போது வெளிப்புற காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஒருவருக்கு போன் செய்து தகவலை சொன்னேன். உடனே அவர் சம்பவ இடத்திற்கு வந்து என்னை அவரது இருசக்கர வாகனத்தில் ஏற்றி பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சையில் சேர்த்தார். மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் பெயர் மற்றும் விவரங்கள் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. மேற்படி சம்பவம் நடந்து 13 வருடங்கள் ஆனதால் மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளரின் விவரங்கள் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் பண்ருட்டி காவல் நிலைய போலிசாரிடம் நான் கொடுத்ததுதான். மேற்படி நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த பண்ருட்டி காவல் நிலைய போலிசாரிடம் நான் இந்த வழக்கு சம்பவம் பற்றி சொன்னேன். அவர்கள் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலம் தான் தற்போது என்னிடம் காட்டப்பட்ட புகார் வாக்குமூலமாகும். மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**